Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 364

சனிக்கிழமை 25 நவம்பர் 2023

கார்த்திகை 09 ஆம் நாள் – வ... ...ண்டு 2054

## அராலியில் சங்கிலி அறுப்பு

யாழ்., நவ. 25
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலத்தடிப் பகுதியில் வைத்து பெண்ணொருவரிடமிருந்து தங்கச் சங்கிலி நேற்றுக் கொள்ளையிடப்பட்டுள்ளது.
வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் இது தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது. (அ-ம-20)

## விபத்தில் ஒருவர் இறப்பு!

வவுனியா, நவ. 25
வவுனியாவில் பாரவூர்தியுடன் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த முத்துவண்டா (வயது -74) என்பவரே உயிரிழந்தவராவார்.
வவுனியா நகர பள்ளிவாசலின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-110)

# மாவீரர்களை அஞ்சலிக்க மக்களை அனுமதிக்குக!



## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 25

மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றிவிட்டு, அங்கு மக்கள் வழிபடுவதற்கு அனுமதி வழங்குங்கள் - என்று நாடாளுமன்றில் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

»11

## மாவீரரை அஞ்சலித்தால் கடும் நடவடிக்கையாம்!

கொழும்பு, நவ. 25
மாவீரர்களை நினைவேந்தினால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுத் தெரியப்படுத்தியுள்ளனர்.
தமிழீழ விடுதலைப் புலிகளை அஞ்சலிக்கும் வகையில், மாவீரர் தினத்தை கடைப்பிடிப்பவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று

»11



## மாவீரர் நாளுக்கு பொருள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப்படுத்தும் வகையில் நினைவேந்தலுக்குத் தேவையான பொருள்களை சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

»11

## புலிகளின் ஆயுதம்: தேடுதலில் தோல்வி!

முல்லைத்தீவு, நவ. 25
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் இராணுவத் தளவாடங்களைத் தேடி பொலிஸார் மேற்கொண்ட அகழ்வு நடவடிக்கை தோல்வியில் முடிந்துள்ளது. இதையடுத்து தோண்டப்பட்ட கிடங்குகளை மூடிவிடுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
போரின் இறுதிநாள்களில் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ள கடற்கரையில் விடுதலைப் புலிகளால்

»11

## கல்முனை வடக்கு தனிக் கட்டமைப்பு

### வழக்கை விசாரிக்க நீதிமன்றம் முடிவு

மட்டக்களப்பு, நவ. 25
கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அறிவிக்கும்படி கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு ஏற்பது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

»11

## சித்திரவதைக் கொலை 4 பொலிஸார் கைது!

யாழ்ப்பாணம், நவ. 25
இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், நான்கு பொலிஸார் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் சிங்களவர்கள், இருவர் தமிழர்கள்
யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையை அடுத்தே அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றையதினம் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ம-26)

## இளைஞன் சித்திரவதைக் கொலை;

# வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட பொலிஸாரை கைதுசெய்யுங்கள்

### நீதிமன்றம் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 25
சித்தன்கேணியைச் சேர்ந்த அலெக்ஸ் என்ற இளைஞன், பொலிஸாரின் சித்திரவதையால் கொல்லப்பட்ட நிலையில், இது தொடர்பான சிவில் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸாரைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, இளைஞனின் உயிரிழப்பு தொடர்பான இறப்பு விசாரணையில் முன்வைக்கப்பட்ட சிவில் மற்றும் நிபுணத்துவ வாக்கு

»11





noolaham.org | aavanaham.org

# வெள்ள இடங்களுக்கு கழிவு மணல் போடல்

## மக்கள் எதிர்ப்பு

வடிகால்களை துப்புரவு செய்து சேகரிக்கப்பட்ட கழிவு மண்ணை வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களுக்கு போடுவதற்கு சாவகச்சேரி நகரசபை வாகனம் முயன்றவேளை மக்கள் எதிர்ப்பு வெளியிட்டதையடுத்து தடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தையின் பல இடங்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது. அதற்கு மண்போட்டு நிரவுமாறு வியாபாரிகளும் பொதுமக்களும் நகரசபையிடம் முறையிட்டிருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நகரப்பகுதி வடிகால்கள் துப்புரவு செய்யப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவு மண்ணை வாகனத்தில் ஏற்றி வந்து வெள்ளம் காணப்பட்ட இடத்துக்கு கொட்டுவதற்கு நகரசபையினர் முயன்றனர்.

இதற்கு சந்தை வியாபாரிகளும் பொது மக்களும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து வாகனம் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. (ச-9)



# பொலிஸாருக்கு தமிழ்மொழி வேலைத்திட்டத்துக்கு புத்துயிர்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் வேலைத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 30 வருட போர்க்கால சூழ்நிலையின்போது, வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அதனால் அந்தப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி எவரையும் சேவையில் இணைத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் நாம் 2016 ஆம் ஆண்டு புதியதொரு நடைமுறையைக் கொண்டுவந்தோம்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு தமிழ்மொழியைப் புகட்டும் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். ஆனால் அந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படவில்லை.

எனவே அந்த வேலைத்திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவோம் - என்றார். (ச-இ)

# பரதநாட்டியம் பரிகசிப்பு உலமா சபை வேதனை!

யாழ்ப்பாணம், நவ. 25

**பரதநாட்டியம் குறித்து இஸ்லாமிய சமய போதகரொருவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவு இந்து மக்களை வேதனைக்குள்ளாக்கியமைக்கு வருந்துகிறோம். இனி இத்தகைய செயற்பாடு இடம்பெறாதிருக்க கவனம் செலுத்துவோமென என்று உலாமா சபை கவலை வெளியிட்டுள்ளது.**

இந்துசைவ மக்களின் வேதனையைப் பகிர்ந்து கொள்கின்றோம் எனத் தலைப்பிடப்பட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அண்மையில் மட்டக்களப்பிலிலுள்ள எமது சகோத சமயமான இஸ்லாமிய சமய போதகரொருவர் முகப் புத்தகப் பதிவில் பரதநாட்டியம் குறித்து இழிவுபடுத்தும் வகையில் பதிவிட்டுள்ளார். இது தவறான செயல். இந்தப் பதிவு இந்துமக்களை வேதனைக் குள்ளாக்கியுள்ளமைக்கு வருந்துகிறோம். இவைபோன்ற செயற்பாடுகள் இனி இடம்பெறா வண்ணம் கவனம் செலுத்துவோம் - என்றுள்ளது. (ச-66)

# யானை உயிரிழப்பு

## காணி உரிமையாளர் சிறையில் அடைப்பு

முல்லைத்தீவு, நவ. 25

ஒட்டுசுட்டான் பெரிய சாளம்பன் கிராமத்தில் வயலுக்கு பாதுகாப்புக்கு போடப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை உயிரிழந்தமை தொடர்பில் காணி உரிமையாளர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

வன உயிரிகள் திணைக்கள மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் யானையின் கொம்புகள் அகற்றப்பட்டு உயிரிழந்த யானை புதைக்கப்பட்டுள்ளது. (ஒ-19)

# பட்ஜெட் விவாதம் முடிந்ததும் ஆளுநர் பதவிகளில் மாற்றம்

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் ஆளுநர் பதவிகளில் மாற்றம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ள முன்னாள் அமைச்சர் ஹாபீஸ்நசீர் அஹமட் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநராக செயற்படும் இ.தொ.கா.வின் தலைவர் செந்தில் தொண்டமான் ஊவா மாகாணத்துக்கு மாற்றப்படவுள்ளார். ஊவா மாகாண ஆளுநராக தற்போது செயற்படும் ஏ.ஜே.எம்.முஸம்மில், மேல் மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

மேல் மாகாண ஆளுநர் எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக்கவுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று வழங்கப்படவுள்ளது. அதேவேளை, பாதீட்டு கூட்டத்தொடருக்கு பின்னர் அமைச்சரவை மறுசீரமைப்பும் இடம்பெறவுள்ளது. (ஒ-44)

# அரசமைப்பு பேரவையால் நீதித்துறையில் சிக்கல்கள்

## ஜனாதிபதி காட்டம்

கொழும்பு, நவ. 25

அரசமைப்புப் பேரவையிலுள்ள சில உறுப்பினர்கள் குழப்பும் வகையில் செயற்படுவதால் அரசமைப்புப் பேரவையின் செயற்பாடு தடுக்கப்படுகிறது. இந்த நிலைமை நீடித்தால் தற்போதைய முறைமையை செயற்படுத்த முடியாமற்போகும். இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் கூறியதாவது:-

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்றத்துக்கு நியமிக்குமாறு பரிந்துரைத்தேன். ஆனால் அவரின் பெயரை எதற்காக நிறுத்தி வைத்துள்ளனர் எனத் தெரியவில்லை. நீதியரசர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில். தீர்மானமொன்றை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசமைப்பு பேரவையிலுள்ள உறுப்பினர்களில் மூவர் ஒரு பக்கம் உள்ளனர். மற்றைய மூவர் மற்றுமொரு பக்கமுள்ளனர். இருவர் வாக்கெடுப்பில் இருந்து விலகியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தற்போது பொலிஸ்மா அதிபரும் இல்லை. நீதிபதிகளும் இல்லை. இப்படியிருந்தால் எப்படி நீதியை நிலைநாட்டுவது? அரசமைப்புப் பேரவை என்பது நிறைவேற்று அதிகாரத்தின் ஓர் அங்கம்- என்றார். (ச-44)

# உளவுக்கப்பல்களை இலங்கை ஏற்காது!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

உளவு பார்க்கும் கப்பல்களை இலங்கையிலுள்ள துறைமுகங்களில் நங்கூரமிடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பெஸ்ட்போஸ்ட் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆய்வுக்கப்பல்களே இலங்கைக்கு வந்து செல்கின்றன, நாங்கள் நடுநிலைமையாக எல்லா நாடுகளின் கப்பல்களுக்கும் அனுமதியளிக்கிறோம்.

ஆனால் சீனக்கப்பல்கள் வரும்போது மாத்திரம் பெருமளவில் விமர்சனம் எழுப்பப்படுகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய எந்தவிதமான செயற்பாடுகளிலும் இலங்கை ஈடுபடாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வேற நாடையா; நாங்கள் வேறு நாடு!

## இயற்கையும் இந்த நாட்டைப் பிரித்து வைத்திருக்கிறது - அருந்தவபாலன்

யாழ்ப்பாணம், நவ. 25

**எங்கள் மண்ணின் மரநடுகைக் காலப் பகுதி வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை கிடைக்கும் தற்போதைய காலப் பகுதி. தென்னிலங்கை மக்களுக்கான பருவமழை கிடைக்கும் காலம் தற்போதைய காலப் பகுதி யல்ல. அது தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை கிடைக்கும் காலப் பகுதி. தமிழர் தாயகத்தையும், தென்னிலங்கையையும் இயற்கையே வேறு படுத்தி வைத்திருக்கிறது. அதனால் தான் நீங்கள் வேற நாடையா! நாங்கள் வேறு நாடு! என்று பாடி வைத்தார்கள் என அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.**

கிட்டுப்பூங்காவில் ஆரம்ப மான 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சி தொடக்க நிகழ்விலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

மாவீரர்களின் கனவு தாயக மண்ணின் விடுதலை. மண் ணின் விடுதலை என்பது வெறும் மண்ணின் விடுதலை யல்ல. மண்ணில் வாழ்கின்ற மக்களின் பண்பாட்டு விடு தலை. இந்த மண்ணில் வாழ் கின்ற தமிழ்மக்களின் பண் பாடு என்பது அன்றும், இன் றும், என்றும் மரத்துடன் இணைந்த ஒரு வாழ்க்கை முறையாகும். மக்களின் பண் பாட்டு விடுதலை அல்லது மண்ணின் விடுதலை என்பது அங்கு வாழும் மக்களின் மரத் துடன் இணைந்த இயற்கை வாழ்வை மீண்டும் சுதந்திர மாக, எந்தத் தளையுமில்லா மல் வாழ்வதற்கான ஒரு விடு தலையாகும். எங்கள் இயற் கைச் சமநிலையைப் பேணுவ தற்காகப் புதிதாக மரங்களை நடுகை செய்ய வேண்டும். ஏற்கனவே நடுகை செய்த மரங்களைப் பராமரித்து அதன் பயன்களைப் பெற வேண்டும் - என்றார். (ஓ-66)



## மருத்துவக் கலாநிதி கோபிசங்கருக்கு ஜனாதிபதி விருது

கொழும்பு, நவ. 25

கொழும்பில் விஞ்ஞான ஆராய்ச் சிக்கான தேசிய விருது எல்செவி யர் பரிந்துரையின் கீழ் மருத் துவக் கலாநிதி கோபிசங்கருக்கு பண்டாரா நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட் டது. உயர் அறிவியல் ஆராய்ச் சிக்காக இவருக்கு மேற்குறித்த விருது வழங்கப்பட்டது.

இந்த ஆய்வில் எல்செவியர் எனும் உலகளாவிய பதிப்பகத் தால் இலங்கையைச் சேர்ந்த நபரால், இங்குள்ள ஸ்தாபனத் தில் மேற்கொள்ளப்பட்ட ஆய் வின் ஆராய்ச்சிக் கட்டுரை, சர்வ தேச தரத்திலான சஞ்சிகையில் பிரசுரித்தமை ஆய்வுக்குட்படுத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-27)



## புலிகளின் தளபாடங்களைத் தேடி முள்ளிவாய்க்காலில் அகழ்வு

முல்லைத்தீவு, நவ. 25

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடத்தை நீதிமன்ற உத்தர வுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன் னெடுக்கப்பட்டது. அந்த இடத்தில் விடுதலைப்புலிகள் ஆயுதங் கள் மற்றும் பெறுமதியான பொருள்களைப் புதைத்து வைத்துள் ளனர் எனக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகத் தோண்டப்பட்டது. ஆனால் முதல் நாள் நிறைவில் எவையும் மீட்கப்படவில்லை. (ஓ-19)

## கடற்றொழிலாளர்தின நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, நவ. 25

சர்வதேச கடற்றொழிலாளர் தின நிகழ்வு கிளி நொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பழைய கச்சேரி முன்பாக விருந்து கடற்றொழிலாளர் பேரணியாக கிளி நொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தைச் சென்ற டைந்து நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மூவின மக் கள் வருகைதந்து நிகழ்வில் கலந்துகொண்ட னர்.

உலக மீனவர் சங்கத்தின் செயலாளரும் தேசிய மீனவ சங்கத்தின் அமைப்பாளருமான ஹமந் குமார மற்றும் களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் பி. குணரட்ன ஆகியோரும் நிகழ் வில் பங்கேற்றனர். (ச-113)



## புதினம் தெரியுமோ?

'இருந்தால் தலைவர், இல்லையெண்டால் கடவுள்' இப்பிடித்தான் 'தலைவரைப்' பற்றி நினைச்சுக் கொண்டு எங்கட சன இருக்குது. முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு அவரைப் பற்றியும், அவரின்ர குடும்பத்தைப் பற்றியும் ஆயிரத்தெட்டு வதந்தியள் வந்திட்டுது. ஆனால் 'அவர்' வரவேயில்லை. அப்ப ஏன் உந்த வதந் தியள் மட்டும் வருகுது? எல்லாம் பிழைப்புக் காகத்தான். முந்திக் கனபேர் இயக்கத்தை வைச்சுத்தான் பிழைப்பு நடத்தினவை. இப்ப அவைக்கு இயக்கமும் தலைவரும் இல் லாததால, இப்பிடி வதந்தியளை அவிட்டு விட்டு வருமானத்துக்கு வழிபார்க்கினம்.

இந்த வதந்தியளில லேட்டஸ்ட் வதந்தி 'தலைவரின்ர மகள் துவாரகா இந்தமுறை மாவீரர் தினத்துக்கு உரையாற்றப் போறா' எண்டதுதான். இவ்வளவுநாளும் வெளி நாடுகளில 'துவாரகா' எண்டு சொல்லி மொட் டாக்குப் போட்ட ஒராளைக் காட்டி காசு கறந்த கூட்டம், இப்ப அதை இஞ்சையும் பரப்ப நினைக்குது. இங்கத்தை மீடியாக்காரருக்கு இப்ப ஒரே கோல்மழை. 'துவாரகா இருக்கிற விசயத்தை மீடியாக்களில போடுங்கோ' எண்டு கெஞ்சலோ கெஞ்சல். 'இவ்வளவு நாளும் ஏன் அவை இருக்கிறதை சொல்லேலை? இப்ப ஏன் சொல்லுகினம்?' எண்டு கேட்டால் அதுக்குப் பதில் இல்லை.

14 வருசமா அவை தங்களை வெளிப்படுத் தேலை எண்டா, இப்பு வெளிப்படுத்துறதுக்கு ஒரு காரணம் வேணும். அதைவிட இப்பிடி தாங்கள் உயிரோட இருக்கிறதைச் சொல் லுறவை, தாங்கள் எந்த நாட்டில இருக்கினம் எண்டதையும் சொல்லுவினமோ?. இப்ப மட்டும் நிலைமை சீரர்கிட்டுதோ?

துவாரகாவின்ர மாவீரர் உரைக்குப் பக்கப்பாட்டு மாதிரி, தலைவரின்ர மகன் சார்ள்ஸ் அன்ரனி எழுதின மாதிரி ஒரு கடிதமும் உலாவுது. அதில ஒரு நாட்டின்ர அட்ரஸும் போட்டிருக்கு. உலகத்துக்கே தெரியாமல் மறைஞ்சு வாழு றவை, எந்த நாட்டில இருக்கினம் எண்டு அட்ரஸ் போட்டு கடிதம் எழுதமாட்டினம் எண்டு அந்தக் கடிதத்தை 'செய்தவைக்கு' தெரியாது போல. அதைவிட 'அன்ரனி' எண்டதை 'ஆண்டனி' எண்டு தமிழகக்காரர் மாதிரி எழுதி யிருக்கு. ஆருக்கும் உழைக்கப் பிழைக்க வழி வேணுமெண்டா உண்மையைச் சொல்லி பிச்சை கேட்டால் இருக்கிறத போட்டிட்டுப் போடுவினம். அதை விட்டிட்டு ஒரு இனத்தின்ர விடுதலைக்காக முப்பது வருசத்துக்கு மேல கஷ்டப்பட்டு, கடைசியில தங்கட உயிரைக் கூட குடுத்த குடும்பத்தை வைச்சு இப்பிடி கேவல மான வேலை செய்யாதையுங்கோ.

ஒருவேளை அவை உண்மையாவே உயிரோட இருந்தாக் கூட, அவையை அவையின்ர பாட்டில நிம்மதியா வாழவிடுறதுதான் அவைக்குச் செய்யிற மரியாதையா இருக்கும்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தரம் - 5 புலமைப்பரீட்சைப் பெறுபேறு

வவுனியா, நவ. 25

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மருதோடை அ.த.க. பாடசாலை மாணவி அ.மிதுனா தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளி களுக்கு மேலாக புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ரி-75)

## நூற்றாண்டு நினைவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 25

நயினாதீவு அமரர் வித்துவான் சி.குமாரசாமியின் நூற்றாண்டு நினைவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற வுள்ளது. (ச)

## புலமைப்பரிசில் பெறுபேறுகள்

2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. கிடைக் கப் பெற்ற பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

**யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்**
த.வைஸ்னவி - 151, பா.நிக்ஷன் - 149, நா.தீபிகா - 133, ஜெ.சாளினி - 116, ம.மதுசிகா - 92.

**யாழ். மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்**
ம.வர்சான் - 186, வி.விசாகன் - 183, சி.அட்சிதன் - 178, தி.ஆருஷா - 174, ஜெ.கஜிராம் - 174, ம.நிதேஷ் - 170, சி.யஸ்மினா - 169, றி.டனுசியன் - 169, இ.ஆகாஷ் - 168, சி.சியானா - 168, ம.டிஷானா - 165, கி.திஷானிக்கா - 164, வி.அக்ஷயா - 163, ச.திட்ஷாசாஹி - 158, உ.அஸ்வினி - 157, ஜெ.நர்த்தகி - 156, க.அஜிஷ்னன் - 155, கோ.சஜிர்த்தன் - 154, பை.அனிஸ் - 153, ம.ஸஜானிக்கா - 153, ப.அனுரோகான் - 152, ரா.கனிஸ் - 151, ம.அபிஷன் - 151, பே.கர்ஷயா - 151, ச.அக்சயா - 151, சி.தசாயினி - 149, யோ.லதுர்ஜன் - 149, வி.கேசனா - 149, தி.திசானி - 147, கு.தினிஷா - 107 (விசேட தேவையுடைய மாணவி). (ரி-9)

**வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்**
ஜெ.செந்தமிழ் - 167, ஹீ.டிசாந்தன் - 166, சி.டன்சிகா - 163, யூ.சஸ்மியா - 163, ச.சஸ்மிகா - 161, க.கிரேசி - 160, ச.சாரோன் - 157, உ.டனுஜா - 155, மு.தேனுஜா - 155, கி.பிரஸ்ணவி - 150, சி.டம்சிகா - 149, ஜெ.அக்ஸனா - 147, கோ.பர்ஜித் - 147, நி.சாருகா - 146, நி.கரோலின் - 146, யோ.பிரணீத் - 145.

**குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை**
கு.துளசிகன் - 156, ம.சரணியா - 155, ம.டிசானி - 146.

**யாழ்.அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை**
அ.சயித் - 170, அ.அக்ஷயா - 163, யூ. ஏனோக் - 145, அ.அனஸ்ரிகா - 145.

**கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்**
அ.ஆகாஸ் - 175

**வவு. வீரமணிக்கன்குளம் திருமகள் வித்தியாலயம்**
பி.துசிபிரியந்தனன் - 166 (ரி-110)

புலமைப்பரிசிலில்

## வவுனியா மாவட்டத்தில் 388 மாணவர்கள் சித்தி!

வவுனியா, நவ. 25

வவுனியா மாவட்டத்தில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியைக் கடந்து 388 மாண வர்கள் சித்தியடைந்துள்ளனர்.

அதன்படி வவுனியா தெற்கு வலயத்தில் 303 மாண வர்களும் வவுனியா வடக்கு வலயத்தில் 85 மாணவர் களும் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் 9 பேர் அடங்குகின்றனர். (ச-75)



அனலைதீவு தெற்கு சக்காதி கலட்டி முருகமூர்த்தி சுவாமி கோவில் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ரி-9)



## அளவெட்டி அருணாசலம் தேசியத்தில் பதக்கங்கள்

யாழ்ப்பாணம் - அளவெட்டி அருணாசலம் வித்தியா லயம் அழகியல் போட்டிகளில் தேசிய மட்டத்தில் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை பெற்றுச் சாதனை யீட்டியுள்ளது.

குழுப்பாடலில் பெண்கள் குழு முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் தனியிசை தில்லானாப் போட்டியில் செ.கிந்துஜா, தனியிசை பதம் போட்டியில் கி.அனுஜா ஆகியோர் இரண்டாமிடம் பெற்று வெள் ளிப்பதக்கங்களையும் தமதாக்கி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-36)



வவுனியா வடக்கு வலய முன்மாதிரிப் பாடசாலையான புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்துக்கு தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப் பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்கள் இணைந்து களத் தரிசிப்பை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற் கொண்டனர். (ச-75)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங் கும். தடைகளைத்தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். நெடுநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** எதையும் சமாளிக்கும் மனப் பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவி யில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கடகம்:** கணவன்-மனைவிக்குள் அன் யோன்யம் உண்டு. திடீர் பணவரவு உண்டு. புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத் தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு வியாபா ரத்தை பெருக்குவீர்கள்.

**சிம்மம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சிக் கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். உத்தியோ கத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல் லது. புதிய முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி:** பிள்ளைகள் உங்கள் அருமை யைப் புரிந்துகொள்வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோ கத்தில் உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்க ளுக்காக மற்றவர்களின் உதவியை நாடு வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலை யாட்களை மாற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். சிக்கன மாகசெலவழித்து சேமிக்கத் தொடங்குவீர் கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். ஆன்மிக நாட்ட அதிகரிக்கும். உத்தி யோகத்தில் எல்லே ரும் மதிப்பார்கள்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண் பர்கள் உறவினர்கள மத்தியில் செல்வாக்கு உயரும். விருந்தினரின் வருகையால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் புது ஒப்பந் தங்களால் லாபம் அடைவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் சந் ழும் நிலைக் கும். கைமாற்றாக வாங்கியி பணத்தை திருப்பித் தருவீர்கள். புதிய ர் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலை யாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**மீனம்:** ராசிக்குள் சந்திரன் இ ருப்பதால் பல வேலைகளையும் இழுத்து போட்டு பார்க்க வேண்டி வரும். அடு வர்களை குறைக்கூறிக் கொண்டிருக்கா ங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்



புலமைப்பரிசி பரீட் சையில் 196 ள்ளி களைப் பெற்ற யாழ். மாவட்டத்தில் முதலி டம்பெற்ற யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாட சாலை மாணவி அமல்ராஜ் வனிஷ்கா மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளை யினரால் அண்மை யில் கௌரவிக்கப்பட் டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வங்குரோத்துக்குக் காரணம் என்ன?

பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

'போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் போர் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. இன்று இலங்கை வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற சூழலிலே மொத்த வரவு–செலவுத் திட்டத்தில் 11 வீதமும் பொதுமக்கள் பாதுகாப்புக்கு 3.6 வீதமுமாக 14.6 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகின்றது. சுகாதாரத்துக்கு 10.6 வீதம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்கு 6.1 வீதம். வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியையும் அதிகரிக்கவேண்டும். உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிப்பதற்கு மிக முக்கியமானவை கைத்தொழில், விவசாயம், மீன்பிடி என்பவையாகும். ஆனால் கைத்தொழிலுக்கு 0.2 வீதமும். விவசாயத்துக்கு 2.6 வீதமும், மீன்பிடிக்கு 0.18 வீதமும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது' என்று அடுத்த ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் குறுக்குவெட்டை அம்பலப்படுத்தியிருக்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நாடு வங்குரோத்து அடைந்தமையால் பாதிக்கப்பட்டது அரசியல்வாதிகள் அல்ல. மக்கள். அதுவும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவு பாதிப்பை எதிர்கொண்டார்கள் – எதிர்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி கிஞ்சித்தும் அக்கறை இல்லாது தொடர்ந்தும் நாட்டை இராணுவமயப்படுத்துவது பற்றியே அரசாங்கம் சிந்தித்துக்கொண்டிருக்கின்றது. போர் இல்லாத நாட்டில் பாதுகாப்புத்துறைக்கு இவ்வளவு நிதி ஏன் ஒதுக்கப்படுகின்றது என்ற கேள்வி இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனது மனதிலும் எழவேண்டும். வெறுமனே சிங்கள – பௌத்த பேரினவாதச் சகதியின் பின்னால் இருந்து கொண்டு சிந்திக்காமல், ஒவ்வொரு சிங்களக் குடிமகனும் இந்தக் கேள்வியை முன்வைக்கவேண்டும். அரசியல்வாதிகள் தங்கள் தகிடுதத்தங்களால் இந்த நாட்டைக் கெடுத்து குட்டிச்சுவராக்கி வங்குரோத்து நிலைக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களின் சீத்துவத்தால் ஏற்பட்ட பாதிப்பைச் சுமக்கப்போவது மக்களே. இப்போதும் சொகுசாக அவர்கள் தங்கள் வாழ்வைக் கொண்டு நடத்த வரி மேல் வரி விதிப்பால் துவண்டு விழப்போவதும், பொருள்களின் விலை அதிகரிப்பாலும், மின்சாரம் உள்ளிட்ட ஏனைய சேவைகளினது கட்டண அதிகரிப்பாலும் நெருப்பில் விழுந்த பூச்சி போல பொசுங்கிக் கருகப்போவதும் அப்பாவி மக்களே.

நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஒற்றை இலக்கத்தில் இருக்கத்தக்கதாக பாதுகாப்புத்துறைக்கு மாத்திரம் இரட்டை இலக்க ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமையை சாதாரணமாகக் கடந்து சென்று விடக்கூடாது.போர் முடிந்த பின்னரும் பல இலட்சங்களில் பாதுகாப்புத் தரப்பினரை வைத்துக் கொண்டு அவர்கள் ஊடாக பொதுமக்களின் வருமான மீட்டலைக் கெடுக்கும் வகையிலேயே இலங்கை அரசு இயங்கிக் கொண்டிருக்கின்றது. பலாலியில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் வளம்கொழிக்கும் செம்மண் பூமியை இராணுவம் வல்வளைப்புச் செய்து வைத்திருக்கின்றது. அந்தக் காணியை மக்களிடம் மீள ஒப்படைத்தால் விவசாயத்தைச் செய்து அதில் மக்கள் வருமானமீட்டுவதுடன் பொருளாதார மீட்சிக்கும் வழிகோலும். அதற்கு வாய்ப்பளிக்காது வெறுமனே இராணுவத்தை அங்கு குந்த வைப்பதால், இராணுவத்தைக் கட்டி மேய்ப்பதற்கும் செலவு செய்து பொருளாதார மீட்சிக்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்யும் வேலையைத்தான் சிங்கள – பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ந்து செய்கின்றன.

இந்த விவகாரத்தை சிங்கள மக்கள், தமிழ் மக்களின் பிரச்சினையாக நோக்காமல், இந்த நாட்டின் பொருளாதார வங்குரோத்துக்கான காரணியாக நோக்குவதுடன், தங்கள் மீதான வரிச்சுமைகளுக்கு இவைகளும் காரணம் என்பதை உணரவேண்டும். மாற்றத்துக்கான பாதை அங்கே திறக்கும்.


### வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பெரியளவில் வளர்ச்சியடையும்."

- கிரேக்கப் பழமொழி -





# ஜனாதிபதியின் கைப்பொம்மை அரசமைப்புப் பேரவை அல்ல!

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 25**

**ஜனாதிபதி கூறுவது போல் இருப்பதற்கு அரசமைப்புப் பேரவையானது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அல்ல. ஜனாதிபதி நாட்டைத் தவறாக வழி நடத்துவதை ஏற்கமுடியாது.**

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் வெளியிட்ட கருத்துக்குப் பதிலடியாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் நீதிபதிகள் சிலரை நியமிக்க அரசமைப்புப் பேரவையால் முடியாதுபோயுள்ளது என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அரசமைப்புப் பேரவை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அல்ல என்பதை ஜனாதிபதிக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான விடயங்களை முன்வைத்து ஜனாதிபதி நாட்டைத் தவறாக வழி நடத்துவது பொருத்தமானதல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ச-44)

# உற்பத்தித் துறைக்கென தொலைக்காட்சிச்சேவை

கொழும்பு, நவ. 25

உற்பத்தித்துறை தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதற்கென தொலைக்காட்சிச் சேவையொன்றை அரசாங்கத் தகவல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண இந்தத் தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பித்து வைத்தார்.

இதில் உற்பத்தித்துறை தொடர்பான கலந்துரையாடல்கள், உற்பத்தித்துறை தொடர்பான செய்திகள், சுகாதாரம் சம்பந்தமான விடயங்கள், முதலீடுகள் பற்றிய விடயங்கள், நிதித்துறை பற்றிய விடயங்கள், சர்வதேச அளவிலான முதலீட்டு வாய்ப்புகள், சுற்றுலா தொடர்பான செய்திகள் போன்ற 42 வகையான நிகழ்ச்சிகள் இந்தத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளன.

புதிய உற்பத்திக் கலாசாரம் ஒன்றை நாட்டில் உருவாக்கும் நோக்கில் இந்த அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (ச-6)

**நாளை** 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை 10

சுபநேரம் : 09.12 - 10.42
ராகுகாலம் : 04.42 - 06.12

திருக்கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர மருத்துவரின்றி அந்தரிக்கும் எழுவைதீவு

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 25

**ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட எழுவை தீவு பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் இன்மையால் சுகாதார சேவையைப் பெறுவதில் நோயாளர்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாக நேரிடுகிறது என்று அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுமார் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு அடிப்படை வசதிகளற்ற நிலையில் வசித்து வருகின்றன.

வெளிநாட்டில் வசிக்கும் கொடையாளி ஒருவரால் இங்கு ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது.

இதற்கு மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டபோதும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரமே அவர் வருகை தருவதுடன் ஏனைய நாள்களில் அவரைக் காணமுடிவதில்லை. இந்த எழுவைதீவு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் தங்குவதற்கான விடுதி அமைக்கப்பட்டுக் கொடுத்தும் மருத்துவர் இரவு நேரங்களில் தங்குவதில்லை.

அத்துடன் மருத்துவர் இல்லாத நாள்களில் முதலுதவி செய்யக்கூடிய தாதியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் நோய் வாய்ப்படும் மக்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதாயின் கடல் கடந்தே ஊர்காவற்றுறை அல்லது யாழ்.போதனா மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

எனவே, சுகாதாரச் சேவையைப் பெறப் பரிதவிக்கும் எழுவைதீவு மக்களின் நெருக்கடிநிலையைக் கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

இதுதொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டபோது:

குறித்த மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரைத் தருமாறு மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். எதிர்வரும் வருடம் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு சாத்தியங்கள் ஏற்படும் - என்றார். (ச-20)



## மாவீரர் நினைவுப்பலகை முள்ளியவளையில் திறப்பு

முல்லைத்தீவு, நவ. 25

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகாமையில் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பலகை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுடரை முன்னாள் போராளியும் மாவீரர் ஒருவரின் சகோதரரும் ஏற்றிவைக்க மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட பெயர்கள் தாங்கிய நினைவுப் பலகைக்கான சுடரை மாவீரரின் பெற்றோர் ஏற்றிவைக்க, தொடர்ந்து பெயர்ப் பலகையை சட்டத்தரணி வி. மணிவண்ணன் திறந்துவைத்தார். (ஒ-19)





## பச்சிலைப்பள்ளியில் சிறுவர் தின நிகழ்வு

பளை, நவ. 25

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை சிறுவர், முதியோர்தின நிகழ்வு பிரதேசசபை தலைமையில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ப.சத்தியராகவன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 25 மாணவர்களும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற 15 மாணவர்களும் கடந்த 2021ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 35 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன், 90 முதியவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ம-ரி-9)



## துஷ்பிரயோக பாதுகாப்பு; மாணவர்களுக்கு விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், நவ. 25

துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், போதையற்ற சமுதாயம் ஆகியவை தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டை றோ.க. த. க. பாடசாலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்துரைகளை ஆற்றினர்.

இதன்போது சிறுவர்களுக்கான தொடர்பாடல் திறன், பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது?, திறன்களை எவ்வாறு விருத்தி செய்வது? ஆகியவை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. (ச-66)



## உசன் மகா வித்தியாலயம் தேசியத்தில் 5 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ. 25

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் தேசியமட்ட கர்நாடக சங்கீதம் மற்றும் நடனம் உள்ளிட்ட போட்டிகளில் 5 இடங்களைப்பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டிகள் அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்றன. இதில் பங்கேற்ற உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்கள் 4 முதலிடங்களையும் ஓர் இரண்டாமிடத்தையும் தமதாக்கி வடக்கு மாகாணக் கல்வி வலயத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-159)

## மைதான ஊழியர்களுக்கான 50 ஆயிரம் டொலர் எங்கே?

### கேள்வி எழுப்புகின்றார் சஜித்



கொழும்பு, நவ.25

பல்லேகல மற்றும் ஆர்.பிரேமதாஸ மைதான ஊழியர்களுக்கு ஆசிய கிரிக்கெட் பேரவைத் தலைவர் ஜெய் ஷா வழங்கிய 50 ஆயிரம் அமெரிக்க டொலரும், இறுதிப்போட்டியின் நாயகன் முகமது சிராஜ் வழங்கிய 5 ஆயிரம் அமெரிக்க டொலரும் இன்று வரை அந்த ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ-இ)

# அவதூறுகளால் வெதும்புகிறதாம் பெரமுன

கொழும்பு, நவ. 25

இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம் நாட்டுக்குக் கட்டாயம் அவசியம். சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் போலிச்செய்திகள் - வதைப்புகள் என்பவை கட்டுப்படுத்தப்படவேண்டியவையே.

-இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் ராஜபக்சக்கள். ராஜபக்சக்கள் இல்லாவிட்டால், இஸ்ரேல் - காஸாவில் நடப்பதுதான் இங்கும் நடந்திருக்கும். போரை முடிவுக்குக் கொண்டுவந்தது மட்டுமல்லாது வடக்கு- கிழக்கில் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் எமது ஆட்சியிலேயே கொண்டுவரப்பட்டது. புலிகளால் அழிக்கப்பட்ட இடங்கள் கட்டியெழுப்பப்பட்டன.

ஆனால் தற்போது நாட்டைமீட்ட மஹிந்த ராஜபக்சவுக்கு சமூக வலைத்தளங்களில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தால் கூட, "ஆத்மா இளைப்பாறட்டும்" என்று பதிவிடுகின்றனர். இவ்வாறான கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளை சமூக வலைத்தளத்தில் கட்டுப்படுத்தவேண்டும். அதற்கு ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு அவசியம். - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கு பிரதேச சபை – நெடுங்கேணி

### வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2024

2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் தரம் வாய்ந்த வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை 024-2030200, 024-2053014 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவோ அல்லது vnpsnk@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தொடர்புகொள்வதன் மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 15.12.2023

**சோ.மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை**



## அறிவித்தல்

### வவுனியா வடக்கு பிரதேசசபை நெடுங்கேணி.

எமது சபையின் 2024ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத் திட்ட வரைவு 24.11.2023ஆம் திகதி தொடக்கம் 08.12.2023ஆம் திகதி வரை கீழ்குறிப்பிடப்படும் இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ் வரவுசெலவுத்திட்ட வரைவில் 2024ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், எதிர்பார்க்கப்படும் செலவீனங்கள் மற்றும் மேற்கொள்ளப் படவிருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளதால் பொதுமக்கள் குறித்த வரவுசெலவுத்திட்ட வரைவினை பார்வையிட்டு தங்களது அபிப்பிராயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வரவுசெலவுத்திட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள்,

1. தலைமை அலுவலகம்
2. கனகராயன்குளம் உப. அலுவலகம்
1. நயினாமடு பொதுநூலகம்
2. நெடுங்கேணி பொதுநூலகம்
3. நாவலர் சனசமூக நிலையம் - பொதுநோக்கு மண்டபம், 6ம் கட்டை, நெடுங்கேணி.
4. கம்பன் சனசமூக நிலையம் - கனகராயன்குளம்
5. வினிவித சனசமூக நிலையம் - அத்தாவெட்டுனுவெவ.

**சோ.மணிவண்ணன்**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**


## வவு.வடக்கு 'பட்ஜெட்' மக்கள் பார்வைக்கு

வவுனியா, நவ. 25

வவுனியா வடக்கு பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும். பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் மக்கள் பார்வையிடலாம் என்று சபையின் செயலாளர் திருமதி மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (ச-75)



## பரிசளிப்பு நிகழ்வு

புத்தூர் - சோமாஸ்கந்தக் கல்லூரியில் வாசிப்பு மாதத்தை ஒட்டி பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை அதிபர் சி.திரிகரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன் விருந்தினராகக் கலந்து கொண்டு வாசிப்பு தொடர்பான சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

(ரி-66)


## பெயர்மாற்றம்

90 /5.காமால் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **முகமட் சாஜீத் அன்ரலீற்றா** ஆகிய நான் எனது பெயரை **முகமட் சாஜீத் பாத்திமா ஸவ்தா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **முகமட் சாஜீத் பாத்திமா ஸவ்தா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**முகமட் சாஜீத் பாத்திமா ஸவ்தா**



## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த 20 ஆம் திகதி யாழ்நகரில் இருந்து நீர்வேலி பஸ் பயணத்தின் போது பணப்பையுடன் தேசிய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. தே.அ.அட்டை இலக்கம்: 340680103V கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

**077 654 5115**



## Chundikuli Girls' College Jaffna

### VACANCIES

Applications are invited from suitable candidates for the below vacancies.

1. Teacher of Logic & Scientific Methods for A/L Classes.
2. Teacher of English and English Literature for A/L & O/L Classes.
3. Teacher for the English Medium Nursery.

Applications close on 06.12.2023. Only shortlisted candidates will be called for an interview.

Principal
Email:- forwardcgc@yahoo.com



## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V), 1985 இல் பிறந்த, கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட (Canadian Citizen) ரோகிணி நட்சத்திரம் உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 538 9986**



# வினோ நகைப்பூங்கா



185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 24.11.2023 வெள்ளிக்கிழமை தொடக்கம் 177, கஸ்தூரியார் வீதி என்னும் முவரியில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்துகின்றோம்.

உரிமையாரும், ஊழியர்களும்
வினோ நகைப்பூங்கா
இல 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு, அதன் பழைய மாணவரும் இலங்கை வானொலி அறிவிப்பாளரும் பணிப்பாளருமான வி.என்.மதியழகனால் எழுதப்பட்ட "தமிழ் ஒளிபரப்பில் பொற்காலப் பதிவு" நூல் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அவரது சகோதரி குறித்த நூலை பாடசாலைச் சமூகத்திடம் கையளித்தார். (ச-63)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
**வேலுப்பிள்ளை சிறீதரன்** அவர்களின் அன்புத் தந்தை

**வல்லி வேலுப்பிள்ளை**

2023.11.23 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை,**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26. 01. 1932



தோற்றம்
19.01.1944

மறைவு
06.12.2022

மறைவு
22.04.2022

**அமரர் கதிரித்தம்பி வேலும்மயிலும்**

**அமரர் வேலும்மயிலும் மங்களேஸ்வரி**

காலம் மற்றுமொரு வருடமென ஓடி நகர்கையிலும்
இருவரது நினைவுகளும் எங்களை உங்களுடனே
எப்போதும் அணைத்துச் செல்கிறது
அன்பினால் அனைவரையும் இணைத்து
அறிவையும், ஆளுமையையும் புகட்டிய உங்கள்
நினைவுகளில் நின்று மீண்டு எழுகிறோம்.

கோவில் வாசல்,
இணுவில் மேற்கு.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 27064) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சிதம்பரப்பிள்ளை**
**கந்தசாமி**

திதி: கார்த்திகைத் திங்கள்
பூர்வபக்க திரயோதசி

அன்பான என் உறவைப் பிரிந்து
ஆண்டுகள் ஒன்றாகிவிட்டதே!
நம்பமுடியவில்லை உங்களைப் பிரிந்து
ஆற்றிட முடியாத் துயரிலே - என்
காலங்கள் கழிகின்றது
அன்றில் பறவையாய் - நாம்
ஒன்றாய் இருந்த அழகிய காலங்கள்
என்றுமே மறக்கமுடியாதவை
நான் வாழும் காலம் வரை
வானில் இருந்து - நல்
ஆசிகள் தந்திடுங்கள்

தோற்றம்
01.07.1938

மறைவு
05.12.2022

இல.269, கண்டி வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி

# வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234 /39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமான வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 16 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும். அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

01. அதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனிததனி அறிவித்தலகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
02. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
03. தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
04. சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்
05. இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்
06. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

## கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

## (02.12.2023 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி)

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 01 | மண்டைதீவு | மண்டைதீவு மகாவித்தியாலயம் | திரு.ஜெயபாலன் சதீஸ் |
| 02 | 02 | மண்டைதீவு | மண்டைதீவு மகாவித்தியாலயம் | திரு.சபாரட்ணம் அருள்நாதன் |
| 03 | 03 | அல்லைப்பிட்டி | அல்லைப்பிட்டி கிளைக்கட்டடம் | திரு.மகேசன் நிசாந்தன் |
| 04 | 04 | மண்கும்பான் | மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | சந்திரசேகரன் விஜயானந்தா |
| 05 | 05 | ஆலம்புலம் | செட்டிப்புலம் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 06 | 06 | தேவிகோட்டம் | வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் | திரு.இராசரட்ணம் வேல்குமார் |
| 07 | 07 | துறையூர் | வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் | திரு.கனகரட்ணம் வக்ஷன் |
| 08 | 08 | சந்திரா | வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 09 | 09 | சிற்பனை | சிற்பனை முருகன் சனசமூக நிலையம் | திரு.தங்கராசா கண்ணதாசன் |
| 10 | 10 | வங்களாவடி | வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | திருமதி சுபாசினி உதயகுமார் |
| 11 | 11 | வேலணை மத்தி | வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | திருமதி. கிருஸ்ணவேணி முகிந்தன் |
| 12 | 12 | சோளாவத்தை | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் |
| 13 | 13 | பள்ளம்புலம் | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் | திரு.பாலசந்திரன் பாலரவி |
| 14 | 14 | சரவணை | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் | திரு.சிவலிங்கம் பிரதீபன் |
| 15 | 15 | கேணிக்கரை | வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம் | திரு.ஜோசப் ஜெகதாஸ் |
| 16 | 16 | அம்பிகைநகர் | அம்பிகைநகர் ஒய்வு மண்டபம் | திரு.சிங்கராசா சியாந்தன் |

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**857, கே.கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஒப்பம் : **கி. சந்திரசேகரன்**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணயக் கைதிகள் ஹமாஸால் விடுவிப்பு

காஸாவில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹமாஸ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களில் 13பேர் முதற்கட்டமாக விடுவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாம் தடுத்து வைத்துள்ள இஸ்ரேலியர்களின் பட்டியலை ஹமாஸ் வழங்கியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர் என பி.பி.சி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ள 4 நாள்களும் தினமும் எரிபொருள் தாங்கிகள், நிவாரண லொறிகள் என்பன போர் நடைபெற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 01 . 1954



மறைவு
22 . 11 . 2023

### செல்வராசா தனலட்சுமி

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா தனலட்சுமி கடந்த (22.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், செல்வராசா (யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி சங்கத்தின் தலைவர், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்) அவர்களின் பாசமிகு மனைவியும், சசிதரன், சபேசன், பவித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேக்கா, சஜந்தினி, லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தவராசா அவர்களின் அன்புச் சகோதரியும் பிரியங்கா, தரூன், சானுகன், அக்ஷயா, தனுசிகன் ஆகியோரின் பேர்த்தியும், சற்குணதேவியின் அன்பு மைத் துனியும், தனு, தூயவன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்,
முருகமூர்த்தி கோவிலடி.

தகவல்:
கணவர் - மா.செல்வராசா

## மரண அறிவித்தல்

### பெனடிக்ட் றெனியூட்

(Assistant Manager - Industial sales Interocean Lubricants Pvt.ltd)

தாளையடியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையையும், இரத்மலானையையும் வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ட் றெனியூட் நேற்று (24.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தனலக்ஷ்மி (மகிந்தா) அவர்களின் அன்புக்கணவரும், றித்திக்கா, றிசிக்கா ஆகியோரின் அன்புத்தந்தையும், பெனடிக்ட் - மேரித்திரேசா ஆகியோரின் அன்பு மகனும், தனபாலா (காலஞ்சென்றவர்) - வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மருமகனும், கனியூட், ஜெனியூட் (Srilankan Insurance field officer), ஸ்டனியூட் (PPT owner), காலேப் (PPT Manager), ஏனோக் (Abans Area Regional Manager) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கிலாரிஸ், காயத்திரி, லூட் மேரி தர்ஷினி, மேரி டினுஷா, நேன்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் நடைபெற்று CMC Borella மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகவேலையாட்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 41208) S-1

தகவல்:
குடும்பத்தினர்
077 386 6250
077 766 7715

## மரண அறிவித்தல்

பிறப்பு
31 . 08 . 1932



இறப்பு
24 . 11 . 2023

### திருமதி செல்வநாயகம் கௌரிஅம்மா
### (கனகம்மா)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கௌரிஅம்மா நேற்று (24.11.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2023 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீபதி'
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27078) A-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 . 02 . 1942



அம்பாளின் பாதத்தில்
22 . 11 . 2023

### கனகரத்தினம் மகேஸ்வரி

யாழ். நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் மகேஸ்வரி அவர்கள் 22.11.2023 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கமுத்து தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாதமணி ஆகியோரின் சகோதரியும், ஈஸ்வரானந்தம் மற்றும் காலஞ்சென்றவர்களாகிய நாகமணி, தங்கம்மா, செல்லம்மா, விசாலாச்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவபாலன் (Swiss), சத்தியபாலன் (USA), ஜெகதீஸ்வரி (Germany), ஜெகவதனி (Swiss), ஜெகவாஜினி (Sril Lanka), கேதாரகௌரி (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேஸ்வரி (Swiss), அன்பொழியாள் (USA), சிவகுமாரன் (Germany), பாஸ்கரன் (Swiss), பஞ்சலிங்கம் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷானி, லக்சயன், ரவீனா, சியானந், பவிஷா, அபிஷா, அபிஷான், தானியா, எமிலியா, விஹான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா பூந்தோட்டம் மயான மண்டபத்தில் நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு பூந்தோட்ட மயானத்தில் (வவுனியா) தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
0094 7782 82802

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டக்ளஸ் மீதான குண்டுத்தாக்குதல்:

# சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட தாயாரை மன்னித்து விடுவிக்குக

### ஜனாதிபதியிடம் கோரிக்கை!

**யாழ்ப்பாணம், நவ. 25**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது 2004ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு 14ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு சாவுத்தண்டனையை எதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலாவை விடுதலை செய்வதற்குரிய பொதுமன்னிப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

ஜனாதிபதிக்கான குறித்த கோரிக்கைக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அவர்கள் கையளித்துள்ளனர்.

2004ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ.சத்தியலீலா அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். 14 ஆண்டுகள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து 2018ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றால் '15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத்தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும்.' என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் சாவுத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது. நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்தியலீலா தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிகச்சிரமப்படுகிறார்.

14 வருடங்களாகக் குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக்குள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்டு விடுதலையாகி வெளியில் வந்த பின்பும் சாவுத்தண்டனைக் கைதியாக மீண்டும் சிறை செல்வதை நினைத்துப் பார்க்கமுடியாது. அதைவிட, உயிரை மாய்த்துக் கொள்வதேமேல் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் அவருக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொதுமன்னிப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கேட்டுக்கொள்வதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-100)

## மரநடுகைத் திட்டம்

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூராய் கிராமத்தில் சூரிச் அருள்மிகு சிவன் கோவில் தமிழ்ச் சங்கத்தின் "அன்பேசிவம்" அறக்கட்டளையினால் நடைமுறைப்படுத்தப்படும் "வரப்புயர" மரநடுகைத் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தத் திட்டத்துக்கான ஒழுங்கமைப்பை மன்னார் ரோட்டரிக் கழகத்தினர் மேற்கொண்டிருந்தனர். (ரி-213)

## கொடிகாமம் சந்தையில் கைகலப்பு

கொடிகாமம், நவ. 25

தேங்காய் கொள்வனவாளர்களிடையே கொடிகாமம் பொதுச் சந்தையில் நேற்றுமுன்தினம் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தனித் தனியாக தேங்காய் கொள்வனவு செய்து வாகனங்களில் ஏற்றி தென்பகுதிக்கு அனுப்புகின்றனர்.

சகோதரர்கள் இருவர் கேட்கும் விலைக்கு நேற்றுமுன்தினம் பொதுமக்கள் தேங்காய்களை வழங்கியுள்ளனர். இதனால் மற்றைய சகோதரர் ஆத்திரமடைந்து அவர்கள் இருவருடன் தர்க்கப்பட்டு கைகலப்பில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தை குத்தகைக்காரர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் அங்கு வந்து மூவரையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். (ஒ-9)

## மோசமான காலநிலை

# 17 பேர் பாதிப்பு

வவுனியா, நவ. 25

சீரற்ற காலநிலையால் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக மழையுடனான காலநிலை நிலவிவருகின்றது.

அநேகமான குளங்களின் நீர்மட்டம் முழுக்கொள்ளளவை எட்டி மேலதிக நீர் வெளியேறி வருகின்றது.

வவுனியாவின் பெரியகுளமான பாவற்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் குளத்தின் பாதுகாப்புக் கருதி அதன் நான்கு கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. (ஒ-110)

## முறைசாரா தொழிலாளர் ஈ.பி.எவ்.பில் உள்ளீர்ப்பு!

**தொழிற்றுறை அமைச்சர் ஏற்பாடு**

கொழும்பு, நவ. 25

நாட்டில் முறைசாராத் தொழிலாளர்களையும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றில் இணைத்துக்கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம்.

-இவ்வாறு ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

முறைசாராத் தொழிலாளர்கள் என்று குறிப்பிடப்படும் உதாரணமாக, கட்டட நிர்மாணப்பணிகளில் ஈடுபடுவோர், நீர்க்குழாய் பொருத்துபவர்கள், தளபாட உற்பத்தியாளர்கள் போன்ற தொழில்களில் ஈடுபடுவோரின் தொழில்களுக்கும் பெறுமதி வழங்கப்படவேண்டும்.

அந்தவகையில் அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களின் தொழில் தரத்தை மேம்படுத்தவும் அவசியமான அரசாங்கத்தின் பங்களிப்பை வழங்கக்கூடிய சட்டவிதிகளைப் புதிய தொழிலாளர் சட்டத்தில் கொண்டு வர எதிர்பார்த்துள்ளோம். புதிய தொழிலாளர் சட்ட உருவாக்கம் நிறைவடையும் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் - என்றார். (ச-இ)

# பச்சிலையில் குடியமர 70 குடும்பங்கள் பதிவு

### கிளி.மாவட்டச் செயலர் தகவல்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு 70 வரையான குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன என கிளிநொச்சி மாவட்டச்செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தினுடைய மீள்குடியேற்றம் தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் மக்கள் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள முகமாலை மற்றும் கிளாலி ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த பிரதேசங்களிலே மீள்குடியேறுவதற்காக இதுவரை 65 வரையான குடும்பங்கள் தங்களுடைய பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களும் சொந்தக்காணிகளில் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்துள்ளன - என்றார். (ச-113)

## பெயர்ப்பலகை அடித்துடைப்பு

வவுனியா, நவ. 25

ஆயுள்வேத வைத்தியசாலையொன்றின் பெயர்ப்பலகையை இனந்தெரியாத விஷமிகள் அடித்துடைத்து கீழே வீழ்த்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட புதுக்குளத்தில் நடந்துள்ளது.

இந்த நிலையில் பொதுச்சொத்துகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்த வேண்டாமென வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை அறிவித்தல் பலகையொன்றை அவ்விடத்தில் நிறுவியுள்ளது. (ச-75)

## செவ்வாய்க்குச் செல்வதற்கு இந்தியர் ஆடை வடிவமைப்பு

விண்வெளிக்கு மனிதர்கள் அணிந்து செல்வதற்கான ஆடையொன்றை இந்தியாவை பூர்வமாகக்கொண்டு லண்டனில் வசித்துவரும் ஒருவர் வடிவமைத்துள்ளார்.

அனுரிதா சந்தோலா என்ற ஆடை வடிவமைப்பாளரே இந்த ஆடையை வடிவமைத்துள்ளார். இவர் பிரிட்டிஷ் றோயல் கல்லைக்கல்லூரியில் ஆடை வடிவமைப்பு பயிற்சி பெற்றுள்ளார். (ச-6)

ஈழத்திரை
செல்வா திரை அரங்கு
173/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி in ' ஜெயிலர் '
தினசரி - 10.30 / 2.30 / 6.30
அறிமுக கட்டணம் :-200/=
100 பேருக்கான விசேட நிகழ்வுகள் மற்றும் ஈழத்து குறும்படங்கள், முழு நீளத்திரைப்படங்கள் வெளியிடவும், காட்சிப்படுத்தவும்.
தொடர்புகொள்ளவும்:- 077 651 0375

நல்லூர்க் கந்தன் திருமணசேவை
எம்மிடம் எல்லா இன மத மணமகன்கள், மணமகள்கள் அரச உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது, இஞ்சினியர், டாக்ரர் பொறியியலாளர் செவ்வாய் குற்றம் உள்ளவர்கள், செவ்வாய் இல்லாதவர்கள், விவாகரத்தானவர்கள், சூரியன், செவ்வாய் உள்ளவர்கள், இல்லாதாவர்கள் எல்லோருக்கும் எம்மிடம் மணமக்கள் உண்டு
தொடர்பு கொள்க: வி.விஜயந்தி
077 973 3183
CS 27077 | S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குத்தொடுவாயில்

# 4 எலும்புக்கூடுகள் நேற்றும் மீட்பு!

## 'ஸ்கான்' ஆய்வு ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ. 25

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து நான்கு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று முற்றாக மீட்கப்பட்டுள்ளன. இதுவரை 30 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

அதிதொழில்நுட்பத்துடன் கூடிய 'ஸ்கான்' இயந்திரத்தின் உதவியுடன் நேற்றையதினம் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே நான்கு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், துப்பாக்கிச் சன்னங்கள், ஒரு மார்க்கர் பேனா உள்ளிட்டவையும் மீட்கப்பட்டன.

இந்தப் புதைகுழி எவ்வளவுதூரம் வியாபித்துள்ளது என்பது தொடர்பான 'ஸ்கான்' ஆய்வுகள் இன்றைய தினமும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-19)

# வெளிநாடுகளுக்கு சிசுக்கள் விற்பனை

## சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, நவ. 25

இலங்கையில் பிறந்த குழந்தைகளை வெளிநாட்டு மக்களுக்கு விற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட நோர்வேப் பிரஜை ஒருவரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கும்பல் கண்டிப் பிரதேசத்திலிருந்து செயற்படுவதாகக் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. (ச-இ)

# பொலிஸ் அலுவலர் சடலமாக மீட்பு!



கொழும்பு, நவ. 25

பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து தப்பிச்சென்றவரைப் பிடிப்பதற்காக ஆற்றுக்குள் இறங்கிய நிலையில், நேற்று முன்தினம் காணாமற்போன பொலிஸ் அலுவலர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி பிரகாசன் (வயது - 26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜா - எல ஆற்றுக்குள் இறங்கிய நிலையில் காணாமற்போன அவர் சுமார் 30 மணிநேரத் தேடுதலின் பின்னர் நீர்கொழும்பு களப்பு பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ம-44)

# வாகன விபத்தில் ஐவருக்கு காயம்

வவுனியா, நவ. 25

வவுனியாவிலிருந்து தேங்காய்களை ஏற்றிக்கொண்டு மதவாச்சி நோக்கிப் பயணித்த பாரவூர்தியொன்று மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் (மோட்டார்சைக்கிளில் மூவரும், பாரவூர்தியில் பயணித்த இருவரும்) வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-113)



### மாவீரர்களை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் 4 ஆயிரம் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன. அவ்வாறானதொரு துயிலும் இல்லத்தில் தூபிகள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன. விளக்கேற்றுவதற்கு இருந்த சிறிய தூபிகூட பொலிஸாரின் உதவியுடன் உடைத்தெறியப்பட்டுள்ளது. இது எவ்வளவு பெரிய கேவலமான செயல். இலங்கை வெட்கித் தலைகுனியவேண்டும்.

போரில் வெற்றி, தோல்வி என்பது இயல்பு. எல்லாளன் மன்னனை வெற்றிகொண்ட சிங்கள மன்னன், எல்லாளனுக்கு சிலை வைத்து வணக்கம் தெரிவிக்கச் சொன்னான். இப்படி நாகரிகமான, நல்லெண்ணம் கொண்ட மன்னர்கள் இருந்துள்ளனர். எனவே, சிங்கள இளைஞர், யுவதிகள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வரவேண்டும். எமது மக்களின் கண்ணீர் சொல்லும் கதையைக் கேட்கவேண்டும்.

எதற்காக வக்கிரமாக நினைவுத்தூபியை உடைத்தார்கள்? என்ன காரணத்துக்காக இப்படி செய்தார்கள்? மாவீரர் முகப்பு வாசல் நல்லிணக்கத்துக்கு எவ்வாறு பாதிப்பாக அமையும்? இராணுவச் சீருடையுடன் உள்ள சிலைகள் வடக்கில் உள்ளன. பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் தமிழர்கள் உள்ளனர். நிலைமை இப்படி இருக்கையில் மாவீரர் துயிலும் இல்ல நினைவுத் தூபியை இனவெறி கொண்டு பொலிஸார் அழித்துள்ளனர். இது கேவலம் இல்லையா?

வடக்கு - கிழக்கு என்பது தமிழர்களின் வரலாற்றுத் தாய்வழி மண். ஆனால் கிழக்கை விடுத்து வடக்குக்கான தீர்வு பற்றியே ஜனாதிபதி பேசுகின்றார். தமிழர்களுக்கு அரசியல் தீர்வை முன்வைக்கும்போதுதான் இந்த நாடு பொருளாதார ரீதியில் வளர்ச்சி எழுச்சி பெறும். மாவீரர் தினத்தை குழப்புவதற்காகவே பொலிஸ் மற்றும் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு குழப்ப, குழுக்களை உருவாக்கியுள்ளது' - என்றார். (அ-ம-44)

### புலிகளின்...

ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டதாக நம்பப்படும் இடம் ஒன்றினை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொலிஸ் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமையவே இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கடந்த இரண்டு நாள்களாக எந்தவிதமான தடயப் பொருள்களும் மீட்கப்படாததையடுத்தே அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. (அ-ம-19)

### வாக்குமூலத்தில்...

மூலங்களின் அடிப்படையில் நீதிவான் நீதிமன்றினால் இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

குறித்த இளைஞனின் உயிரிழப்புத் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 'பி' அறிக்கை மீதான இறப்பு விசாரணை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் சார்பில் பாதிக்கப்பட்ட நலன்கருதி மூத்த சட்டத்தரணிகள் பலர் நீதிமன்றில் நேற்று முன்னிலையாகினர். இளைஞனுடன் கைது செய்யப்பட்டவர் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி உள்ளிட்டோரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இதன்மூலம் 'பொலிஸாரின் தாக்குதலால் ஏற்பட்ட உட்காயங்களால் சிறுநீரகம் செயலிழந்தமையாலேயே சாவு சம்பவித்தது' என்று மருத்துவ அறிக்கையில் சொல்லப்பட்ட விடயத்தை நீதிமன்றில் உறுதிசெய்யப்பட்டது.

இறப்பு விசாரணையின் நிறைவில் நிபுணத்துவ வாக்குமூலத்தின் அடிப்படையில் பொலிஸ் தடுப்பில் இளைஞனுக்கு சித்திரவதை இடம்பெற்றுள்ளமைக்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று நீதிமன்றம் கோடிட்டுக்காட்டியது. அத்தோடு சிவில் வாக்குமூலத்தில் கூறப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சகலரையும் கைது செய்ய உத்தரவிட்ட மன்று மேலதிக விசாரணைக்குத் தவணையிட்டது. (அ-ம-26-27)

### மாவீரரை...

முன்னாள் சிப்பாய் ஒருவர் தாக்கல் செய்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே, மாவீரர்களை அஞ்சலிக்கும் விதமான நினைவேந்தல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினார்கள். இவர்களின் தரப்பில் அரச தரப்புச் சட்டத்தரணி சமிந்த விக்கிரம இந்த உறுதிமொழியை வழங்கினார். (அ-ம-6)

### மாவீரர்...

நினைவேந்தலுக்குத் தேவையான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி என்பவற்றை நவம்பர் 27ஆம் திகதி வரை தினமும் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சேகரிப்புக் கூடத்தில் வழங்கமுடியும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ-ம-125)

### கல்முனை...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் பந்துல கருணாரட்ண, நீதியரசர் சசித் மொறாயஸ் ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த முடிவை அறிவித்தது.

அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் ஜனாதிபதியின் அனுமதி ஆகியவற்றுடன் 1989 முதல் கடந்த 34 வருடங்களாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது. அதன் தனித்துவத்தைப் பறிக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை சட்டவிரோதமானவை என அறிவிக்கவும், அது தனியான பிரதேச செயலக அந்தஸ்து மற்றும் கட்டமைப்புடையது என்று உறுதிப்படுத்தவும் உரிய உத்தரவை வழங்குமாறுகோரி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனால் இந்த மனு கடந்த ஜனவரியில் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரணைக்கு ஏற்பதா? என்ற விடயம் குறித்து கடந்த ஏப்ரல் மாதத்தில் நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்க இருக்கையில், கடைசி நேரத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸும் இன்னும் ஒருவரும் இந்த வழக்கில் தங்களையும் இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்க்கும்படி கோரி விண்ணப்பித்தனர். அதன் அடிப்படையில் மீண்டும் விசாரணைகள் நடைபெற்றன. மனுவை விசாரணைக்கு ஏற்பது என நேற்று முடிவு செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் அடிப்படையில் எதிர் மனுதாரர்களான பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, கல்முனை பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட உள்ளிட்ட எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணை வழங்க உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசல் முஸ்தபா, சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன ஆகியோரும், அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மனோகர ஜயசிங்கவும் முன்னிலையாகினர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்காவுக்கு பிணை

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.சிறிரங்காவுக்கு வவுனியா மேல்நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை கைதுசெய்யுமாறு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் உத்தரவிட்டது. வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து தொடர்பான வழக்கின் சாட்சி ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ரங்கா குற்றப்புலனாய்வுப் பிரிவால் கடந்த மார்ச் மாதம் கைதுசெய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன் கடந்த 8 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவரது வழக்கு வவுனியா மேல்நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது அவருக்கு மேல்நீதிமன்ற நீதிபதி பிணை வழங்கியுள்ளார். (அ-ம-110)


## மணமகள் தேவை

கொழும்பில் இரண்டு சொந்த வியாபார ஸ்தாபனம் நடத்தும் 1983 இல் பிறந்த கத்தோலிக்க மதத்தை சேர்ந்த மணமகனுக்கு வட மாகாணத்தில் வாழும் கத்தோலிக்க மணமகளை தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு: **0044 7710 314169** (பிலிப்)

**(Viber, Whatsapp, Direct Call after 1 pm Srilankan Time)**

## விவசாயிகளுக்கு



இந்தியா மற்றும் சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **பலதரப்பட்ட விவசாய விதைகளை நாட்டும் கருவிகள்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். கையால் இயக்கக் கூடியதில் இருந்து டிராக்டரில் (Tractor) பொருத்தக்கூடியது வரை

**ஆர்க்.என். கம்பனி**

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571

**Hotline: 071 535 7799 / 071 973 9917**

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப்பிரிவு

**A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய**

## இலவச கருத்தரங்கு

**29 November 2023**
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

**30 November 2023**
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

"காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை"

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 017 5346**

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 06 . 1933 — மறைவு 22 . 11 . 2023



### பொன்னம்பலம் யோகலட்சுமி

ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல் மிலேனியம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் யோகலட்சுமி அவர்கள் கடந்த (22.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நேசராணி மற்றும் நாகபூசணி, சரஸ்வதி, சிவசெல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகம், தங்கராசா, கோணேஸ்வரன் மற்றும் பத்மநாதன், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதானந்தசிவம், சுசிலாதேவி, காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் கலாதேவி, புவிதாஸ், குகதாஸ், கண்ணதாஸ், சிறிமுருகதாஸ், சாந்தினிதேவி, ரகுதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசோதி, இரத்தினகுமார், அருள்சோதி, மாலினி, சுகி, சுஜாத்தா, பிறேமாவதி, பத்மாவதி, புஸ்பமாலா, வனஜா ஆகியோரின் மாமியாரும், துஸ்யந்தன் கௌசிகா, ஜெசித் கேதாயினி, சன்சீவ், சபீனா, சுரேஸ், அஜித்தா, ஜெனி, ஹெமினா, பர்வித், பூர்விகா, துபீஷன், சதுர்ஷன், மதுரிகா, நிவேகா, நிரூந், ரிஷி, ரிஷான், அபிரன், அர்வின், அனிஷ்கா, விஷ்மிக்கா, அர்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மித்ரா, வர்ஷிக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிலேனியம் ஒழுங்கை,
ஆலடி வீதி,
தோணிக்கல் வவுனியா.
**077 615 6061**

தகவல்:
**மகன் - சதானந்தசிவம் (சிவம்)**
தோணிக்கல் வவுனியா.

(cs 25824) (N.1)

## வேலைவாய்ப்பு

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தகசாலைக்கான வேலைவாய்ப்பு.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் புத்தகசாலை
0774949683,0770776469

## துரை திருமணசேவை
## மணமகன் தேவை

1997 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் உடைய உதயச்செவ்வாய் உடைய 35 பாவக்கிரகம் கொண்ட ஆங்கில ஆசிரிய மணமகளுக்கு Bank, Engineer, Accountant, Surveyor போன்ற உத்தியோகத்திலுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றோம். எம்மிடம் சகல தரப்பினரது ஜாதகங்களும் உண்டு. பதிவுகள் இலவசம்.

**077 656 8282**

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**

(CS 27074) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
- நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(CS 26820) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org